# கற்கண்டு கணிதம் (karkandukanitham.in)

## NMMS தேர்வு மாதிரி வினாத்தாள் - 8th Science (அலகு 16)

பாடம்: நுண்ணுயிரிகள்

---

📚 **NMMS தேர்வுக்குச் சிறந்த வழிகாட்டி!**
கற்கண்டு கணிதம் Aptitude Book அமேசானில் கிடைக்கிறது: *https://www.amazon.in/dp/B07V5Y7WCG*
📲 **WhatsApp Channel:** *https://whatsapp.com/channel/0029VaoGbmsGOj9fZSxi4S0Z*

1. நுண்ணுயிரிகளைப் பற்றிய படிப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
2. வைரஸ் என்ற இலத்தீன் சொல்லின் பொருள் என்ன?
3. வைரஸ்கள் பாக்டீரியாக்களை விட எத்தனை மடங்கு சிறியவை?
4. வைரஸின் மையப்பகுதியில் உள்ளது எது?
5. வைரஸ்களை படிகமாக்க முடியும் என்பது அதன் எவ்வகைப் பண்பு?
6. முதன் முதலில் பாக்டீரியாவைக் கண்டறிந்தவர் யார்?
7. உண்மையான உட்கரு அற்ற ஒரு செல் உயிரி (புரோகேரியோட்) எது?
8. பாக்டீரியாக்களில் காணப்படும் ரைபோசோம்கள் எந்த வகையைச் சேர்ந்தவை?
9. கோள வடிவ பாக்டீரியாக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
10. கமா வடிவ பாக்டீரியாக்களுக்கு எடுத்துக்காட்டு?
11. ஒரு முனையில் ஒரு கசையிழை மட்டும் கொண்ட பாக்டீரியாவுக்கு எடுத்துக்காட்டு?
12. செல் சுவரைச் சுற்றி கசையிழைகள் காணப்படும் பாக்டீரியா எது?
13. கசையிழையற்ற பாக்டீரியாவிற்கு எடுத்துக்காட்டு?
14. பச்சையம் அற்ற யூகேரியோட்டிக் உயிரினங்கள் எவை?
15. பூஞ்சைகளைப் பற்றிய படிப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
16. ஒரு செல் பூஞ்சைக்கு எடுத்துக்காட்டு?
17. ஈஸ்ட்களில் எந்த முறையில் இனப்பெருக்கம் நடைபெறுகிறது?
18. ஆல்காக்களைப் பற்றிய படிப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
19. ஒரு செல் ஆல்காவிற்கு எடுத்துக்காட்டு?
20. கிளாமிடோமோனாஸில் எந்த வடிவ பசுங்கணிகம் காணப்படுகிறது?
21. புரோட்டோசோவா என்ற கிரேக்க சொல்லின் பொருள் என்ன?

22. புரோட்டோசோவாக்களைப் பற்றிய படிப்பு?
23. போலிக்கால்கள் மூலம் இடப்பெயர்ச்சி செய்யும் உயிரி எது?
24. கசையிழைகள் மூலம் இடப்பெயர்ச்சி செய்யும் புரோட்டோசோவா?
25. இடப்பெயர்ச்சி உறுப்புகள் அற்ற ஒட்டுண்ணி புரோட்டோசோவா எது?
26. அமீபாவில் கழிவு நீக்கத்திற்கு உதவுவது எது?
27. டி.என்.ஏ மற்றும் ஆர்.என்.ஏ-வைக் கொண்டிராத, புரதத்தாலான தொற்றுத் துகள் எது?
28. பிரியான்களால் நரம்பு திசுக்கள் பாதிக்கப்பட்டு ஏற்படும் நோய்?
29. செல்லுக்கு வெளியே காணப்படும் முழுமையான வைரஸ் துகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
30. முதன்முதலில் பெனிசிலின் என்ற எதிர் உயிர்க்கொல்லி மருந்தை கண்டறிந்தவர் யார்?
31. பெனிசிலின் எந்த பூஞ்சையிலிருந்து பெறப்படுகிறது?
32. முதன் முதலில் தடுப்பூசியைக் கண்டறிந்தவர் யார்?
33. காசநோய்க்கு வழங்கப்படும் தடுப்பூசி எது?
34. வளிமண்டல நைட்ரஜனை மண்ணில் நிலைநிறுத்த உதவும் பாக்டீரியா?
35. மண்ணிற்கு வளம் சேர்க்கும் நுண்ணுயிரிகள் எவை?
36. 'ஸ்டிரெப்டோமைசின்' என்ற மருந்து எதிலிருந்து பெறப்படுகிறது?
37. போலிக்கால்கள் (Pseudopodia) என்பவை எதன் நீட்சியாகும்?
38. வைரஸ்கள் உயிருள்ள செல்லுக்கு வெளியே எவ்வாறு செயல்படுகின்றன?
39. அமீபா எந்த வகையைச் சார்ந்த நுண்ணுயிரி?
40. உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்புகளைக் கொண்ட நுண்ணுயிரி எது?

## விடைகள் (Answer Key)

| | |
|---|---|
| **1 - 10** | நுண்ணுயிரியல், விஷம், 10000, DNA அல்லது RNA, உயிரற்ற பண்பு, ஆண்டன் வான் லூவன்ஹூக், பாக்டீரியா, 70 S, காக்கஸ், விப்ரியோ காலரா |
| **11 - 20** | விப்ரியோ காலரா, எஸ்செரிச்சியா கோலை (E.coli), கோரினிபாக்டீரியம் டிப்தீரியா, பூஞ்சைகள், மைக்காலஜி, ஈஸ்ட், மொட்டு விடுதல், ஆல்காலஜி/பைகாலஜி, கிளாமிடோமோனாஸ், கோப்பை வடிவம் |
| **21 - 30** | முதல் விலங்கு, புரோட்டோ விலங்கியல், அமீபா, யூக்ளினா, பிளாஸ்மோடியம், சுருங்கும் நுண்குமிழ்கள், பிரியான்கள், குரூட்ஸ்ஃபெல்ட் ஜேக்கப் நோய், விரியான், சர் அலெக்ஸாண்டர் பிளெமிங் |
| **31 - 40** | பெனிசிலியம் கிரைசோஜீனம், எட்வர்ட் ஜென்னர், BCG, ரைசோபியம் / அசோட்டோபாக்டர், பாக்டீரியா & பூஞ்சைகள், ஸ்டிரெப்டோமைசஸ், செல் சவ்வின் நீட்சி, உயிரற்றவை போல, புரோட்டோசோவா, வைரஸ் |